Date : 09.06.2025

SC.No. : 192/2024

PW : 5

Name : **மீனா க.பெ.பஞ்சவர்ணம்**

சாட்சி மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

அ.சா.1ன் தகப்பனாரும் என் கணவரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் ஆலம்பக்கோட்டையில் எதிரி வீடு மட்டும் தனியாக உள்ளது எங்கள் பங்காளி வீடுகள் ஒன்றாக உள்ளது. எனது கணவர் பெயர் பஞ்சவர்ணம் என்றால் சரிதான். அவர் தற்போது இறந்துவிட்டார். தேவகோட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1ம் எதிரி மற்றும் அவரது மகள் ஈஸ்வரி இன்னும் சில பேரை சேர்த்து சிவில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு இன்று வரை நடந்து வருகிறதா என்றால் எனக்கு தெரியாது. நானும் எதிரிகளும் பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று அதிகாரிகள் எங்கள் ஊருக்கு வந்து அ.சா.1ஐ விசாரித்த விபரம் எனக்கு தெரியும். அப்போது 1ம் எதிரியின் அதிகாரிகள் என்ற அடிப்படையில் 1ம் எதிரி அவர்களுக்கு வணக்கம் செய்த விபரம் எனக்கு தெரியும். அப்போது அ.சா.1 1ம் எதிரியை என் பிரச்சினைக்கு எதுக்குடா இங்க வந்த என்று கேட்டு அனுப்பிவிட்டார். அன்றைய தினம் மாலை துரைப்பாண்டி அதிகாரிகளிடம் நீதான்டா சொல்ற என்று கூறி மதுபோதையில் சண்டைபோட்ட விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் எதிரிகளால் நிகழ்த்தப்படவில்லை என்றும் எதிரிகளால் அ.சா.1, 2 க்கு எந்த காயமும்

ஏற்படவில்லை என்றும் அவர்களை அசிங்கமாக திட்டவோ, மிரட்டவோ இல்லை என்றும் இந்த வழக்கில் புகார்தாரர் என் கணவரின் தம்பி மகன் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் சொல்லி கொடுத்ததன் பேரிலும் எனக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சினை சம்மந்தமான வழக்கு நடந்து வருவதால் அந்த விரோதத்தினாலும் எதிரிகளை பழிவாங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.06.09 15:34:14 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.